# THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.120/2019** | **PW.8** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : அரிமுத்து | |
| Father's Name | :சொக்கலிங்கம் | |
| Village | :வள்ளியூர் | |
| Taluk | :இராதாபுரம் | |
| Employment | : ஓட்டுனர் | |
| Age | :50 | Date:30.06.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**( All Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**முதல் விசாரணை :–**

1. நான் வள்ளியூரில் வசித்து ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.6 ஆகும்.** அந்த கையெழுத்தை சுமார் 9 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. வள்ளியூர் பேருந்து நிறுத்தத்தில் ஒரு நாள் மாலை 04.30 மணியளவில் ஆட்டோ ஸ்டேண்டில் நின்று கொண்டிருந்த போது போலீசார் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த கையெழுத்தையும் வள்ளியூர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து செய்து கொடுத்தேன். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(நீதிமன்ற கேள்வி– யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

2. போலீசார் விசாரணையில் கடந்த 14.12.2016 தேதி 18.00 மணிக்கு செம்பாடு விலக்கில் வைத்து வழக்கின் 2 வது எதிரியை போலீசார் விசாரித்த போது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும் அதில் நானும், முத்துகணேசன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும். பின்னர் எதிரி கொடுத்த தகவலின் அடிப்படையில் 2 வது எதிரியிடமிருந்து 7 பவுன் தங்க தாலி செயின் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH Digitally signed by MOSES JEBASINGH Date: 2025.06.30 19:14:57 +0530

Judicial Magistrate,
Valliyoor.